
தனிச்சுற்றுக்கு

# தமிழர் எழுச்சிக் குரல்


## தமிழ்த்தேசியத் தன்னுரிமை நாள் சிறப்பு மலர்

திருவள்ளுவராண்டு 2048 25-02-2017

நன்கொடை: ரூ. 50/-







# உணவு கொடுக்கும் உழவனின் இன்றைய நிலை!

- வழக்கறிஞர் ஆர். கிருஷ்ணமூர்த்தி,
சென்னை உயர்நீதிமன்றம்

மனிதன் முதல்முதலில் மற்ற உயிர்களை வேட்டையாடி அவற்றின் மாமிசத்தை உண்டு விலங்கோடு தானும் ஒரு விலங்காக வாழ்ந்து வந்தான். அதனால் தான், தன் உயிரையும் பல உயிர்களிடம் பலிக்கொடுக்க வேண்டியிருந்தது. காலப்போக்கில் கொஞ்சம் கொஞ்சமாக தன்னுடைய அகவை பயன் படுத்தி விவசாயம் செய்ய எண்ணினான். விவசாயம் மூலம் தன்னை காப்பாற்றிக் கொள்வதோடு, மற்ற உயிர்களை வேட்டையாடுவதை விட்டுவிட்டு, விவசாயத்திற்குப் பயனபடுத்தினான். அவ்வாறு பழக்கப் படுத்திய விலங்குகளில் முக்கியமானவை என்று சொன்னால் ஆடு, மாடு, யானை, நாய்,



பன்றி, எருமை, மாடு, கோழி போன்ற விலங்குகள்.

விவசாயம் என்பதைத்தான் உழவுத் தொழில் என்கிறோம். விவசாயம் செய்யும் போது நிலத்தை ஆழ உழ வேண்டும். இவ்வாறு பூமியை பிளந்து உழவு செய்யும் போது "பாறையைப் போல் இறுகி இருக்கும் பூமி மண் துகள்களாகப் பயிர் செய்ய ஏற்ற பூமியாக மாறுகிறது. அவ்வாறு பூமி மாறும் போது ஐம்பூதங்களால் (நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்) கண்ணுக்கு தெரியாத கோடானகோடி உயிர்கள் பூமியில் தோன்றக் காரணமாக இருப்பவன் உழவன்.

ஓரறிவு முதல் ஆறு அறிவு படைத்த மனிதன் வரை எல்லா உயிர்களுக்கும் உணவு கொடுத்துக் காப்பாற்றும் வல்லமை உழவனிடம் தான் உள்ளது இதையே வள்ளுவர்

**"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
ஊழ்ந்தும் உழவே தலை"**

என்று கூறியுள்ளார்.


உலகின் பிற தொழில்கள் செய்வோருக்கும் உணவை உற்பத்தி செய்து உணவு கொடுப்பவன் உழவன். உழவன் இல்லையென்றால் இந்த பூமியின் மற்ற உயிர்கள் வாழ்வதே கடினம் உலகமும் மற்ற கோள்களின் ஒன்றாக தான் இருக்கும்.

**இதையே நம்முடைய ஔவைப் பாட்டி:**
**"ஆற்றங்கரையின் மரமும் அரசு அறிய**
**வீற்றிருந்த வாழ்வும் விழும்**
**அன்றே - ஏற்றம் உழுக**
**உண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை கண்டீர்!**
**பழுது உண்டு வேறுஓர் பணிக்கு!"**

என்று கூறியுள்ளார்.

இப்படிப்பட்ட உழவனை பார்த்துதான் தன்னுடைய உடையையே மாற்றிக் கொண்டார். நம்முடையத் தேசத்தந்தை "காந்தியடிகள்" நம்முடைய தேசத் தந்தையையே மாற்றிய பெருமை உழவனுக்கு உண்டு என்றால் அது மிகையாகாது.

ஆனால் இன்று விவசாயம் செய்பவர்கள் என்றால் ஏளனமாகப் பார்ப்பது. நடத்துவது தான் அன்றாட காட்டுகளாக இருக்கின்றன. விவசாயம் செய்பவருக்குப் பெண்கூட கொடுப்ப தில்லை. அதோடு மட்டுமல்லாமல் ஒரு விவசாயி பயிர் செய்யக் கடன் வேண்டி சென்றால் வங்கிகளாக இருந்தாலும் தனிநபர்களாக இருந்தாலும் விவசாயியை அடிமைகளாகத் தான் பார்க்கிறார்கள், நடத்துகிறார்கள். இதையும் முறக்கடனை வாங்கி கொண்டு வந்து பயிர் செய்தால் இயற்கையும் உழவனை வாட்டி வதைக்கிறது. இயற்கைச் சீற்றங்களையும் மீறிப் பயிர் செய்து விளையச் செய்த நெல், கரும்பு, காய், கனிகள் போன்றவற்றை விற்கச் செல்லும் போது தரகர்களின் தலையீடும் அதிகமாக உள்ளது. சாப்பிடுகிறோம் அவனைப் பின் தொடர்ந்து தான் நாம் செல்ல வேண்டும் என்று யாரும் உழவனை மதிப்பதில்லை இதனை யெல்லாம் தட்டிக் கேட்க உழவர்களாகிய நாம் நிமிர்ந்து நின்றால் உலகமே நம்மைப் பார்க்கும். உழவன் இல்லையென்றால் உலகுமே இல்லை யென்று நிரூபிக்க வேண்டும். இதை விட்டு விட்டு தற்கொலை செய்யும் அளவுக்கு விவசாயிகளாகிய நாம் ஒன்றும் கொலைக் குற்றம் செய்யவில்லை. கொலையே செய்தால் கூட தூக்குதண்டனை கொடுக்ககூடாது என்று தான் சொல்கிறார்கள். இவ்வாறு இருக்கும் போது உலகிற்கே சோறு போடும் உழவன் சாகலாமா?



நதிநீர் வேண்டி நாம் பிறமாநிலங்களை கையேந்தி நிற்பதைவிட மழைநீரை சேகரித்தால் நீர் பிரச்சனையே நமக்கு வராது. பண்டைய தமிழர்களின் நீர் மேலாண்மையைத் தான் உலகமே பின்பற்றி உள்ளது. எவ்வாறு எனில்?

* பிறகு குட்டையில் நீர் நிரம்பிவிட்டால் கொஞ்சம் தூரம் தள்ளி குளத்தை வெட்டி குட்டையிலிருந்து நீரை குளத்திற்கு கொண்டு வந்து சேமித்து வைத்தார்கள்.

* இதே போல் குளத்தில் நீர் நிரம்பி விட்டால் கொஞ்சம் தூரம் தள்ளி குளத்தைவிட பெரிதாக" "ஊருணி" என்ற ஒன்றை ஏற்படுத்தி, குளத்தில் நிரம்பி வழியும் நீரை கால்வாய்களின் வழியாக கொண்டு வந்து ஊருணியில் சேர்த்து வைத்தார்கள்.

* ஊரணியும் நிரம்பிவிட்டால் கொஞ்சம் தூரம் தள்ளி, ஊரணியை விட பெரிதாக "ஏந்தல்" என்ற ஒன்றை ஏற்படுத்தி, ஊரணியில் நிரம்பி வழியும் நீரை கால்வாய்களின் வழியாகக் கொண்டு வந்து ஏந்தலில் சேமித்து வைத்தார்கள்.

* இந்த ஏந்தலும் நிரம்பிவிட்டால் கொஞ்சம் தூரம் தள்ளி, ஏந்தலைவிட பெரியதாக "தாங்கல்" என்ற ஒன்றை ஏற்படுத்தி (வெட்டி) ஏந்தலில் நிரம்பி வழியும் நீரை கால்வாய்களின் வழியாகக் கொண்டு வந்து தாங்கலில் சேமித்து வைத்தார்கள்.

* தாங்கலும் நிரம்பிவிட்டால் கொஞ்சம் தூரம் தள்ளி, தாங்கலை விடப் பெரியதாக "கரணை" என்ற ஒன்றை ஏற்படுத்தி (வெட்டி) தாங்கலில் இவ்வாறு மழை நீரைச் சேமித்து வைத்தால் நீர்வளம் நம்மிடம் இல்லாமல் போகுமா?

சென்னையில் வெள்ளப் பாதிப்பு வந்ததற்கு காரணமே மேற்சொன்ன நீர் நிலைகளை முறையாக பராமரிக்காமல் இருந்ததும், நீர் நிலைகளை ஆக்கிரமித்து வீடுகள் மற்றும் வீட்டு மனைகளாக மாற்றியதன் விளைவே தான் சென்னையில் மிகப் பெரிய வெள்ள ஆபாயம் ஏற்பட்டதற்கு காரணம் ஆகும். இது போன்ற இயற்கைச் சீற்றங்களைச் தடுப்பதற்காகவும், அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும், நீரை முறையாக சேமித்து வைப்பதற்காகவும் தான் பண்டைய காலத்தில் நீர் நிலைகளை நம் முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். அதன் மூலம் நம் நாட்டில் விவசாயம் செய்து இருக்கிறார்கள். இதனால் நம் தமிழ்நாட்டில் மட்டும் தான் நெல்விளையும் பூமியாக இருந்துள்ளது. இந்த நெல் தான் மனிதன் உயிர் வாழ்வதற்கு முக்கியப் பொருளாகும்.

நம்முடைய புகழ்மிக்க மன்னர்களில் முக்கியமாக கரிகாற்சோழன் கட்டிய கல்லணை தான் திருச்சி போன்ற பெரிய நகருக்கு நீர்வளத்தைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. அதேப்போல் முதலாம் இராசேந்திர சோழன்.

"ஏரியை காப்பாற்றத் தவறியவர்களுக்கு தண்டனையும் கொடுத்துள்ளார். இதை உறுதி செய்யும் விதமாக "ஏரிகளைப் பராமரிப்பது அந்த ஏரி நீரைப் பயன்படுத்தும் மக்களின் கடமையாக இருந்ததை புதுவை மாநிலம் பாகூர் கிராமத்தில் இருக்கும் திருமூலநாதர் கோயிலில் காணப்படும் கல்வெட்டு உறுதி செய்கிறது.

அதே நேரத்தில் திருவண்ணாமலை அருகே உள்ள சிறுபாக்கம் கிராமத்தில் காணப்படும் கல்வெட்டில் "ஏரியை பாதுகாப்பாளர்களின் திருவடியை என் தலைமீது வைத்து தாங்குவேன் என்று முதலாம் இராசராசசோழன் உருகுகிறார். என்று உள்ளது. மேற்சொன்னவற்றைப் பார்க்கும் போது மக்களும், அரசர்களும், நீரைசேமிக்க மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பார்க்கும் பொழுது மெய்சிலிர்க்கிறது.

இன்று மக்களாகிய நாமும், அரசும் இதை மறந்துவிட்டதை நினைக்கும்போது நம்முடைய எதிர்எதிர்காலத்தில் உலகில் மனிதன் வாழவே முடியாத என்ற பயம் மனிதன் தோன்றுகிறது.

மழைநீரை சேமிக்கவும், சேமித்த மழை நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தவும் மக்களும் அரசும் ஒன்றிணைந்து செயல்பட்டால் மறுபடியும் நம்முடைய பூமி நெல்விளையும் பசுஞ்சோலையாக, மாற வாய்ப்புள்ளது.

தற்போது அறிவுக்கப்பட்டுள்ள மத்திய வரவு செலவு திட்டபட்டியல் (Budget)-யில் 10 லட்சம் கோடி விவசாயத்திற்காக ஒதுக்கியுள்ளார்கள். இவ்வளவு பெரிய பணத்தைக் கொண்டு நீர் நிலைகளைச் சரி செய்வதற்கு பயன்படுத்தினால் நாட்டில் பஞ்சமே இல்லாமல் போகும். நதி நீர் இணைப்பும் செய்தால் இந்தியாவில் எந்தவித மாநிலமும் நீர் பஞ்சத்தில் இருக்காது. அனைவருக்குமே வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தவும் முடியும். விலைமதிப்பில்ல விசாயி உயிர்களைக் காப்பாற்ற முடியும். விவசாயி உயிர்களைக் காப்பாற்றினால்தான் இந்த உலகம் அழியாமல் இருக்கும். எனவே நாமெல்லாம் உழவனின் பின்னால் செல்வது தான் நம்முடைய பிறப்பின் நோக்கமாகவும், வள்ளுவரின் வாக்கின் படியும் நடப்போம் என உறுதி ஏற்போம்.

**"உழுதுண்டு வாழ்வரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்."** - குறள் 1033